நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**4 சதவீத வேளாண் வளர்ச்சி: பிரதமர் விருப்பம்**

First Published : 21 Feb 2012 12:45:36 AM IST



தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்ற இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் 50-வது பட்டமளிப்பு விழாவில் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கௌரவ டாக்டர் பட்டம் வ

புதுதில்லி, பிப்.20: வருடாந்திர வேளாண் வளர்ச்சியானது 3.5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்று பிரதமர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் திங்கள்கிழமை நடைபெற்ற இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் 50-வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட அவர் மேலும் கூறியதாவது:

11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் (2007-2012) வேளாண் துறையில் வளர்ச்சி வீதம் 3.5 ஆக உள்ளது. 10-வது ஐந்தாண்டுத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் இது சிறந்த வளர்ச்சி தான்.

இத்துடன் நின்று விடக்கூடாது. 12-வது ஐந்தாண்டுத் திட்டத்துக்குள் 4 சதவீதமாக உயர்த்த நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

அதற்கு வேளாண் துறையில், மேற்கொள்ளும் ஆராய்ச்சி முறைகளை இரட்டிப்பாக்க வேண்டும். மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒருங்கிணைந்து வேளாண் துறையில் சிறந்த வளர்ச்சியை எட்ட பாடுபட வேண்டும்.

வேளாண்துறை சார்ந்த ஆராய்ச்சிகளை மேலும் வலுப்படுத்தி எதிர்காலத்தில் வரும் சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டும். 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவுக்குள் வேளாண்

சம்பந்தமான ஆராய்ச்சிகள் மற்றும் வளர்ச்சிகளுக்கு 2 சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். இது தற்போது ஒரு சதவீதமாக உள்ளது.

வேளாண் உற்பத்திக்கும், விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் இடையே இடைவெளி உள்ளது.

இந்த இடைவெளி குறைக்கப்பட வேண்டும். இந்த ஆண்டுக்குள் 250 மில்லியன் டன் உணவுப் பொருள் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றுவதன் மூலம் இந்த இலக்கை நாம் எட்ட முடியும்.

அதிகமான நிலப்பரப்பில், நீரினை சிக்கனமாகப் பயன்படுத்தி விவசாயப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

அடுத்த 10 ஆண்டுகளுக்குள் நாட்டின் உணவுப் பொருளின் தேவை 150 மில்லியன் டன்னாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

**பிரதமருக்கு பட்டம்...** வேளாண்மைத் துறையின் முன்னேற்றத்துக்குப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட பிரதமருக்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் டாக்டர் பட்டம் வழங்கி கெப்ரவப்படுத்தியது. இந்தப் பட்டத்தை வேளாண்மைத் துறை அமைச்சர் சரத் பவார் பிரதமருக்கு வழங்கினார்.

அரசியல் மற்றும் தனக்கு உரித்தான துறையிலும் பிரதமர் நாட்டின் நலனையே கருத்தில் கொண்டு பணியாற்றினார். விவசாயத்துறையில் முதலீடு, விவசாயம் சம்பந்தமான ஆராய்ச்சியில் வளர்ந்த நாடுகளுடன் கூட்டிணைவு, விவசாயிகள் பயனடையும் விதத்தில் சிறப்பு நிதி ஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு கொள்கைகளை அவர் நிறைவேற்றினார் என்று வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் அவருக்குப் புகழாரம் சூட்டியது.

**விலை குறைவால் விற்பனை குறைந்தது**

First Published : 20 Feb 2012 12:29:15 PM IST

தருமபுரி,பிப்.19: தருமபுரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் புளி விலை குறைந்தது. இதனால் வரத்தும் குறைந்ததாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தெரிவித்தது.

தருமபுரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 5-ம் தேதி புளி ஏல மையம் தொடங்கப்பட்டது. தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை புளி ஏலம் நடைபெற்று வருகிறது. தொடக்க நாளில் ரூ.11 லட்சம் மதிப்பிலான 54.2 டன் புளி ஏலம் போனது. கடந்த வாரம் ரூ.3 லட்சம் மதிப்பிலான 14.7 டன் புளி ஏலம் போனது.

கடந்த வாரம் ஒரு கிலோ தொட்டு புளி குறைந்தபட்சமாக ரூ.20-க்கும், அதிகபட்சமாக ரூ.25-க்கும் ஏலம் போனது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெறும் 10.48 டன் புளி மட்டுமே ஏலம் போனது. இதன் மதிப்பு ரூ.98,534. இதில் ஒரு கிலோ தொட்டு புளி குறைந்தபட்சமாக ரூ.7-க்கும் அதிகபட்சமாக ரூ.11-க்கும் ஏலம் போனது.

ஏலத்தில் குறைந்த அளவு விவசாயிகளே பங்கேற்றனர். வியாபாரிகளும் குறைந்த அளவே வந்திருந்தனர்.

கடந்த வாரத்தைக் காட்டிலும் இந்த வாரம் தொட்டு புளி ஒரு கிலோ ரூ.14 குறைந்து ஏலம் போனது. ஒரு கிலோ கொட்டைப் புளி குறைந்தபட்சமாக ரூ.11-க்கும் அதிகபட்சமாக ரூ.14-க்கும் ஏலம் போனது.

கடந்த ஆண்டைக் காட்டிலும் நடப்பாண்டில் புளி உற்பத்தி 120 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஆனால் விலை குறைந்துள்ளது. இதனால்தான் புளியை விற்பனை செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை என ஒழுங்குமுறை விற்பனைக் கூட ஏல மையம் தெரிவித்துள்ளது.

**விலை குறைவால் விற்பனை குறைந்தது**

First Published : 20 Feb 2012 12:29:15 PM IST

தருமபுரி,பிப்.19: தருமபுரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் புளி விலை குறைந்தது. இதனால் வரத்தும் குறைந்ததாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தெரிவித்தது.

தருமபுரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 5-ம் தேதி புளி ஏல மையம் தொடங்கப்பட்டது. தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை புளி ஏலம் நடைபெற்று வருகிறது. தொடக்க நாளில் ரூ.11 லட்சம் மதிப்பிலான 54.2 டன் புளி ஏலம் போனது. கடந்த வாரம் ரூ.3 லட்சம் மதிப்பிலான 14.7 டன் புளி ஏலம் போனது.

கடந்த வாரம் ஒரு கிலோ தொட்டு புளி குறைந்தபட்சமாக ரூ.20-க்கும், அதிகபட்சமாக ரூ.25-க்கும் ஏலம் போனது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெறும் 10.48 டன் புளி மட்டுமே ஏலம் போனது. இதன் மதிப்பு ரூ.98,534. இதில் ஒரு கிலோ தொட்டு புளி குறைந்தபட்சமாக ரூ.7-க்கும் அதிகபட்சமாக ரூ.11-க்கும் ஏலம் போனது.

ஏலத்தில் குறைந்த அளவு விவசாயிகளே பங்கேற்றனர். வியாபாரிகளும் குறைந்த அளவே வந்திருந்தனர்.

கடந்த வாரத்தைக் காட்டிலும் இந்த வாரம் தொட்டு புளி ஒரு கிலோ ரூ.14 குறைந்து ஏலம் போனது. ஒரு கிலோ கொட்டைப் புளி குறைந்தபட்சமாக ரூ.11-க்கும் அதிகபட்சமாக ரூ.14-க்கும் ஏலம் போனது.

கடந்த ஆண்டைக் காட்டிலும் நடப்பாண்டில் புளி உற்பத்தி 120 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஆனால் விலை குறைந்துள்ளது. இதனால்தான் புளியை விற்பனை செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை என ஒழுங்குமுறை விற்பனைக் கூட ஏல மையம் தெரிவித்துள்ளது.

## புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி

First Published : 20 Feb 2012 03:58:44 PM IST

புதுச்சேரி, பிப். 19: புயலால் பாதிக்கபட்டவர்களுக்கு புதுவை அறிவியல் இயக்கத்தின் சார்பில் உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது.

÷இந்த நிகழ்ச்சிக்கு அமைப்பின் தலைவர் டி.பி.ரகுநாத் தலைமை தாங்கினார். புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் அடங்கிய இடுபொருட்கள், மாணவர்களுக்கு புத்தகப் பைகள், வீட்டுத் தோட்டத்தில் காய்கறிகள் பயிரிடுவதற்கு விதைகள் உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

அறிவியல் இயக்க பொதுச்செயலர் சேகர், துணைத் தலைவர் பரசுராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நெல் கொள்முதல் நிலையம் அமைக்க கோரிக்கை

First Published : 20 Feb 2012 03:12:49 PM IST

ஆறுமுகனேரி,பிப்.19: திருச்செந்தூர் வட்டாரத்தில் 5 இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியருக்கு, அச்சங்க மாவட்டத் தலைவர் எஸ்.எம்.ராமையா அனுப்பியுள்ள மனு:

திருச்செந்தூர் வட்டாரத்தில் பிசான பருவசாகுபடி அறுவடை நடைபெற உள்ளது. இதையொட்டி திருச்செந்தூர், சோனகன்விளை, குரும்பூர், மணத்தி மற்றும் ஆழ்வார்திருநகரியில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்து விவசாயிகளின் நெல்லை கொள்முதல் செய்யவேண்டும்.

ஸ்ரீவைகுண்டம் தென்காலின் மூலம் பாசனம்பெறும் கடம்பா குளம் தூர்வாரப்படாமல் மேடாகி உள்ளது. இக்குளத்தை விரைவில் தூர்வார வேண்டும். ஸ்ரீவைகுண்டம் அணையில் உள்ள 18 ஷட்டர்களையும் பழுது நீக்கவேண்டும். பழுதடைந்துள்ள கிராமச் சாலைகளைச் சீரமைக்க வேண்டும் என மனுவில் தெரிவித்துள்ளார்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**விதையின் ஈரப்பதம் அறிய சோதனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2012,00:16 IST

கருத்தை பதிவு செய்ய

திருவள்ளூர் :தரமான விதைகளை விதைப்பதன் மூலம் அதிக மகசூல் பெற, விதையின் ஈரப்பதத்தை சோதனை செய்து பயன் பெறுமாறு, விவசாயிகளுக்கு விதைப் பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் தெரிவித்துள்ளார்.

விதை பரிசோதனைக்கென்று அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விதையில், புறத்தூய்மை, ஈரப்பதம், பிற ரக கலப்பு, முளைப்புத்திறன் ஆகியவை இருக்க வேண்டும்.

புறத்தூய்மை பரிசோதனையின்போது தூய விதை, பிற தானிய விதை, உயிரற்ற பொருட்கள், களை விதைகள் ஆகியவை கணக்கிடப்படுகின்றன.

ஈரப்பதம் சோதனையில் விதையின் ஈர நிலையும், பிற ரக கலப்பு விதைகளும் கணக்கிடப்படுகிறது.

முளைப்புத்திறன் பரிசோதனையின்போது இயல்பான நாற்று, கடின விதை, உயிரற்ற விதைகள் கணக்கிடப்படுகின்றன.

எனவே, பரிசோதனை செய்து தேர்வான விதைகளை விவசாயிகள் உபயோகித்து அதிக மகசூல் பெறுமாறு திருவள்ளூர் விதைப் பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் முத்துபெருமாள் தெரிவித்துள்ளார்.

## மஞ்சள் ஏலத்தில் தற்போதைய நிலை தொடர வேண்டும்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2012,04:01 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு : மஞ்சள் விவசாயிகள் சங்கம், வியாபாரிகள் சங்கத்துடன் நடந்த முத்தரப்பு பேச்சுவார்த்தையில், "தற்போதைய நிலையே தொடர வேண்டும்' என, ஆர்.டி.ஓ., சுகுமார் உத்தரவிட்டார்.

ஈரோட்டில் ஃபிப்., 17ம் தேதி தனியார் சார்பில் நடத்தப்படும் மஞ்சள் ஏலத்தில் சாம்பிள் மஞ்சள் வைக்க இடமில்லாததால், அனைத்து தரப்பு விவசாயிகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அன்று நடப்பதாக இருந்த ஏலம் ரத்து செய்யப்பட்டது.

"விவசாயிகளை சிலர் தூண்டி விட்டு, தனியார் சார்பில் ஈரோட்டில் நடத்தப்படும் மஞ்சள் ஏலத்தை, செம்மாம்பாளையத்துக்கு மாற்ற சதி நடக்கிறது. முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்' என, விவசாயிகள் கோரினர். நேற்று காலை, ஈரோடு ஆர்.டி.ஓ., சுகுமார் தலைமையில் முத்தரப்பு பேச்சுவார்த்தை கூட்டம் நடந்தது.

மஞ்சள் வணிகர்கள் சங்கம் சார்பில் நிர்வாகிகள் கூறியதாவது: விவசாயிகள் உற்பத்தி செய்யும் மஞ்சளில் மூன்றில் இரண்டு பங்கு தனியார் குடோன்களில் இருப்பு வைத்து, விற்கப்படுகிறது. இந்த தொழில், 100 ஆண்டு பழமைமிக்கது. நம்பிக்கை அடிப்படையில் விவசாயிகள், வியாபாரிகள் நடந்து கொள்கின்றனர்.

செம்மாம்பாளையத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கலெக்டர் உதயசந்திரன் நான்கு ஏக்கர் நிலம் ஒதுக்கி தர முன்வந்தார். விவசாயிகள் தரப்பில் புகார் கூறப்பட்டதால், அப்போதைய, தி.மு.க., அரசு ஒருங்கிணைந்த மஞ்சள் வளாகம் அமைக்க ஒதுக்கியிருந்த, 11 கோடி ரூபாய் நிதியை ரத்து செய்து விட்டது. மாற்று இடமாக கருமாண்டி செல்லிபாளையம் தேர்வு செய்யப்பட்டு, அங்கு குடோன்களை அரசு கட்டி வருகிறது. எங்களை பொறுத்த அளவில் அரசு கட்டிடம் கட்டிக் கொடுத்து எங்கு கூப்பிட்டாலும், அங்கு நாங்கள் ஏலம் நடத்த வருவோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

விவசாயிகள் சங்கங்கள் சார்பில் நிர்வாகிகள் கூறியதாவது:

ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகம் வேண்டும் என்பது விவசாயிகளின், 15 ஆண்டு கோரிக்கை. அமைச்சர், கலெக்டர் உள்பட அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் செம்மாம்பாளையத்தில், 53 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. அந்த நிலம் விவசாய நிலம். அந்த நிலத்தில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்காக அரசுக்கு ஒரு சென்ட் நிலம் கூட ஒதுக்கி தர வியாபாரிகள் முன் வரவில்லை.

குடோனில் இருப்பு வைக்கப்பட்ட மஞ்சள் விலை குறையும் போது, விவசாயிகளை கேட்காமலேயே, வியாபாரிகள் விற்று விடுகின்றனர். பல்வேறு முறைகேடுகள் நடக்கின்றன.

விவசாயிகளிடமிருந்து ஒரு ஏக்கர், 1.5 லட்சம் ரூபாய்க்கு வாங்கி, அதை தற்போது ஒன்றரை கோடி முதல் இரண்டு கோடி ரூபாய்க்கு விற்றுள்ளனர். ஆனால், அரசுக்கு இடம் ஒதுக்கி தர மறுக்கின்றனர். அந்த இடத்தை அரசே எடுத்து கொள்ள வேண்டும்.

வெவ்வேறு இடங்களில் நடத்தப்படும் ஏலத்தால், விவசாயிகள் ஏமாற்றப்படுகின்றனர். செம்மாம்பாளையத்தில் என்ன நடக்கிறது என்று அரசு ஆய்வு நடத்த வேண்டும். மஹாராஷ்டிரா மாநிலத்தில் மஞ்சள் குவிண்டால், 9,000 ரூபாய்க்கு ஏலம் போகிறது. ஆனால், ஈரோட்டில், 4,000 ரூபாய்க்குதான் விற்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

ஆர்.டி.ஓ., சுகுமார் பேசுகையில், ""ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்படும் திட்டத்தை விரைவுபடுத்துவோம். புதிதாக வேறு இடத்தில் மஞ்சள் ஏலம் நடக்க கூடாது. தற்போதையே நிலையே தொடர வேண்டும். அதிகப்படியாக சாம்பிள் வைக்க இடம் இல்லை என்றால், அருகில் உள்ள இடத்தை காட்டுங்கள்.

அங்கு ஏலம் நடத்த அனுமதி தருகிறோம். நாளை (இன்று) ஏலம் நடக்க வேண்டும்," என்றார்.

"சிவராத்திரி என்பதால் நாளை (இன்று) விடுமுறை. அதற்கு மறுநாள் மஞ்சள் ஏலம் நடக்கும்' என்று வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தையில், அதிகாரிகள் தரப்பில் ஒழுங்குமுறை விற்பனை கமிட்டி தனி அலுவலர் பரமசிவம், செயலாளர் முருகானந்தம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) கிருஷ்ணமூர்த்தி, வியாபாரிகள் சங்கம் தரப்பில் ரவிசங்கர், நடராஜன், ராஜமாணிக்கம், விவசாயிகள் சங்கம் தரப்பில் தெய்வசிகாமணி, தளபதி, செங்கோட்டையன், வேலாயுதம், பெரியசாமி, கிருஷ்ணமூர்த்தி உள்பட பலர் பங்கேற்றனர்.

## தீவிர அறுவடையால் நெல் வரத்து அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2012,04:01 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம் : தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் எல்.பி.பி., வாய்க்கால் பாசனப் பகுதியில் நெல் அறுவடை தீவிரம் அடைந்துள்ளதால், நெல் கொள்முதல் நிலையத்துக்கு நெல் வரத்து அதிகரித்துள்ளது.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் எல்.பி.பி., ஆகிய பாசனப் பகுதிக்குட்பட்ட பொலவகாளிபாளையம், நஞ்சகவுண்டன்பாளையம், புதுவள்ளியாம்பாளையம், டி.என்.பாளையம், காசிபாளையம், அத்தாணி, ஏழூர், கவுந்தப்பாடி, கூகலூர் ஆகிய ஒன்பது இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படுகிறது. சன்ன ரகத்துக்கு 11 ரூபாயும்,

குண்டு (மோட்டா ரகம்) ரகத்துக்கு 10.50 ரூபாய் வழங்கப்பட்டது. நெல் கொள்முதல் விலையை உயர்த்தி தர வேண்டும் என விவசாயிகள் கோரினர். அதைத்தொடர்ந்து குண்டு ரகத்துக்கு - 11 ரூபாய், சன்ன ரகத்துக்கு - 11.80 ரூபாய் வழங்கப்படுகிறது.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., ஆகிய இடங்களில் நெல் அறுவடைப் பணி தீவிரமாக நடக்கிறது. அறுவடை செய்யப்படும் நெல், கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வரப்படுகிறது. நெல்லில் உள்ள ஈரத்தன்மை, பதர் ஆகிய காரணங்களால் நெல் கொள்முதல் செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. "வினோயிங்' இயந்திரம் மூலம் பதர் நீக்கப்படுகிறது.

விவசாயிகள் நெல் கொண்டு வந்த ஓரிரு நாட்களில், நெல் கொள்முதல் செய்து பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

சென்ற நவம்பர் மாதத்தில் இருந்து நெல் கொள்முதல் நிலையத்துக்கு நெல் வரத்தான விபரம்: பொலவகாளிபாளையம் - 1,715 டன், கூகலூர் - 1,798 டன், நஞ்சகவுண்டன்பாளையம் - 1,714 டன், டி.என்.பாளையம் - 906 டன், ஏழூர் - 551 டன், அத்தாணி - 1,734 டன், காசிபாளையம் - 1,383 டன், புதுவள்ளியாம்பாளையம் - 1,319 டன், கவுந்தப்பாடி - 362 டன் என மொத்தம், 11 ஆயிரத்து 482 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரி ஒருவர் கூறியதாவது:

ஒரு மூட்டை நெல்லில் பதர் நீக்க, மூன்று நிமிடமாகிறது. ஒரு நாளைக்கு, 700 முதல் 1,000 மூட்டை வரை பதர் நீக்க முடியும். ஆகையால், விவசாயிகள் கொண்டு வந்த நெல் உடனடியாக கொள்முதல் செய்ய முடியாத நிலை இருந்தது. கொள்முதல் நிலையங்களில் ஏராளமான மூட்டைகள் தேக்கமடைந்தது. இரண்டு மிஷின் மூலம் பதர் நீக்கப்படுகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழம் மூலம், சென்றாண்டில் 73 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. நடப்பாண்டு மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள, 29 நெல் கொள்முதல் நிலையங்களில், 20 ஆயிரத்து 689 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 17 ஆயிரத்து 189 டன் சன்னரகம், 3,500 டன் குண்டு ரகம் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டு மஞ்சள் பரப்பளவு அதிகரித்த காரணத்தால், சென்றாண்டு வரத்தான அளவுக்கு நடப்பாண்டு நெல் வரத்தாக வாய்ப்பில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## வாடல் நோயால் அழியும் தென்னைகள் : மாற்று விவசாயத்தை தேடும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2012,22:05 IST

கருத்தை பதிவு செய்ய

கூடலூர் :கேரள வாடல் நோயால் மாவட்டத்தில்,தென்னை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் தென்னைகளை அழித்து விட்டு மாற்று விவசாயத்தை மேற்கொள்கின்றனர்.

கேரள வாடல் நோய் காற்றின் மூலம் பரவக்கூடியது. தென்னையில் இந்நோய் பாதிப்பு ஏற்பட்டால் இலைகள் மஞ்சள் நிறமாகி படிப்படியாக தென்னை மரம் பட்டுப்போகும். இதற்கு விவசாயத்துறையினர் பரிந்துரை செய்த மருந்துகளால் பலன் இல்லை. சுமார் பத்தாயிரம் ஏக்கரில் தென்னைகள் அழிக்கப்பட்டு மாற்று விவசாயத்தை விவசாயிகள் தேர்வு செய்துள்ளனர்.
கடந்த சில மாதங்களில் மட்டும், கூடலூர் பகுதிகளில் இந்நோய் தாக்கத்தால் ஏராளமான தென்னைகள் வெட்டி அழிக்கப்பட்டுள்ளன. இவற்றால் விவசாயிகள் மிகுந்த நஷ்டம் அடைந்துள்ளனர். தென்னைகளை வெட்டி அழித்து அங்கு வாழை, நெல் சாகுபடிக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

---

## *12–வது ஐந்தாண்டு திட்ட கால முடிவில் வேளாண் உற்பத்தி 4%–ஆக உயரும் பிரதமர் மன்மோகன்சிங் நம்பிக்கை*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,புதுடெல்லி*
*எதிர் வரும் 12–வது ஐந்தாண்டு திட்டகாலத்தில் (2012–17) நாட்டின் வேளாண் உற்பத்தி 4 சதவீதமாக உயரும் என பிரதமர் மன்மோகன் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*
*இந்திய விவசாய ஆராய்ச்சி கழக பொன் விழா ஆண்டு பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் மேற்கண்ட தகவலை தெரிவித்துள்ளார்.*
*நடப்பு 11–வது ஐந்தாண்டு திட்ட கால முடிவில் வேளாண் உற்பத்தி 3.5 சதவீத வளர்ச்சியை எட்டும் என தெரிகிறது. இது முந்தைய 10–வது ஐந்தாண்டு திட்ட முடிவில் 2.5 சதவீதமாகவே இருந்தது. அந்த வகையில் தற்போதைய வளர்ச்சி திருப்திகரமாக இருந்தாலும், எதிர் வரும் 12 வது ஐந்தாண்டு திட்டகாலத்தில் இவ்வளர்ச்சியை 4 சதவீதமாக அதிகரிக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என பிரதமர் மேலும் தெரிவித்தார்.*
*அதற்கு ஏதுவாக இத்துறையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக நடப்பு திட்ட காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையை இரு மடங்காக உயர்த்த அரசு ஆலோசித்து வருவதாகவும் தெரிகிறது. தற்போது, வேளாண் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக மொத்த உள் நாட்டு உற்பத்தியில் சுமார் 1 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

பாரத் நிர்மான், மஹாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதி திட்டம் உள்ளிட்ட அரசின் பல்வேறு வேளாண் திட்டங்கள் பயன்தர தொடங்கியுள்ளதாக பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

## குன்னூர் ஏல மையத்தில் 84 சதவீத தேயிலை தூள் விற்பனை

*குன்னூர், பிப்.21–*

*குன்னூர் தேயிலை ஏல மையத்தில் 84 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.*

*தேயிலை ஏலம்*

*வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய இரு நாட்களில் குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பினர் நடத்தும் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது.*

*விற்பனை எண் 7–க்கான ஏலம் கடந்த 16, 17 ஆகிய தேதிகளில் நடைபெற் றது. ஏலத்திற்கு மொத்தம் 11 லட்சத்து 1 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 7 லட்சத்து 93 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 லட்சத்து 8 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*

*84 சதவீத தூள் விற்பனை*

*ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் சுமாரான நிலையில் இருந்தது. இதனால் மொத்த தேயிலை தூளின் அளவில் 84 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. இருப்பினும் தேயிலை தூள் ரகங்களுக்கு ரூ.2 விலை வீழ்ச்சி ஏற்பட்டது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 149 ரூபாய் என்ற விலையில் ஏலம் சென்றது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக ரூ.236 இருந்தது. சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை 48 ரூபாயில் இருந்து 55 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலைதூள் 85 ரூபாயில் இருந்து 145 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*அடுத்த ஏலம்*

*டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.56–ல் இருந்து ரூ.59 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.85–ல் இருந்து ரூ.139 வரையிலும் ஏலம் சென்றது. விற்பனை எண் 8–க்கான ஏலம் வருகிற 23, 24 ஆகிய தேதிகளில் நடக் கிறது. ஏலத்திற்கு மொத்தம் 10 லட்சத்து 83 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*

## **உடல் நலனுக்கு கேடு விளைவிக்கும் பார்த்தீனியம் செடிகளை அழிக்க பொதுமக்களும் முன்வர வேண்டும் கூடலூர் நகராட்சி கமிஷனர் வேண்டுகோள்**

*கூடலூர், பிப்.21–*

*உடல் நலனுக்கு கேடு விளைவிக்கும் பார்த்தீ னியம் செடிகளை அழிக்க பொதுமக்களும் முன்வர வேண்டும் என கூடலூர் நகராட்சி கமிஷனர் (பொறுப்பு) நீலேசுவரன் வேண்டுகோள் விடுத்துள் ளார்.*

*பார்த்தீனியம் செடிகள்*

*ஏகாதிபத்திய நாடுகள் மூலமாக இந்தியாவில் பார்த் தீனியம் செடிகள் ஊடுருவின. மனிதனுக்கு மட்டுமின்றி இயற்கை மற்றும் வனவிலங்கு கள், விவசாய நிலங்களையும் நச்சுத்தன்மை உடையதாக மாற்றும் தன்மை பார்த்தீனியம் செடிகளுக்கு உள்ளது. மனிதனுக்கு ஆஸ்துமா உள்பட பல்வேறு நோய்களை உண்டாக்கும் வல்லமை பார்த்தீனியம் செடிகளுக்கு உள்ளது என மருத்துவ வல் லுனர்கள் தெரிவித்துள்ளனர். பூக்கள் மூலம் விதைகளை பரப்பும் பார்த்தீனியம் செடி கள் தற்போது அனைத்து இடங்களிலும் பூத்து காணப்படுகின்றன.*

*இச்செடிகளின் பாதிப்பை உணர்ந்த தமிழக அரசு அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள பார்த்தீனியம் செடி களை அகற்ற உத்தரவிட்டுள் ளது. இதையொட்டி நகராட்சி களின் மண்டல நிர்வாக இயக்குனர் பாலச்சந்திரன் பார்த்தீனியம் செடிகளை அகற்றுவதற்கு ஒவ்வொரு நகராட்சியிலும் குழு அமைக் குமாறு உத்தரவிட்டார்.*

*சனிக்கிழமைதோறும் அகற்றும் பணி*

*கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் பார்த்தீனியம் செடிகளை அகற்றும் குழு அமைக்கப்பட்டு கடந்த சில தினங்களுக்கு முன்பு கூடலூர்– மைசூர் சாலையோரம் பார்த் தீனியம் செடிகளை அகற்றும் பணி தொடங்கப்பட்டது. இப்பணியை நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் பாலச்சந்திரன் நேரில் பார்வை யிட்டு ஒவ்வொரு வார்டு களிலும் சனிக்கிழமைதோறும் அகற்றுமாறு உத்தரவிட் டார்.*

*இது குறித்து கூடலூர் நகராட்சி கமிஷனர் (பொறுப்பு) நீலேசுவரன் கூறியதாவது:– பார்த்தீனியம் செடிகள் கூடலூர் நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வளர்ந்துள்ளது. இச்செடி களின் வளர்ச்சி மனித உடல் நலனுக்கு கேடு விளைவிப்ப தாகும். குறிப்பாக குழந்தை களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய திறன் பார்த்தீனியம் செடிகளுக்கு உள்ளது. எனவே பொதுமக்கள் தங்களது பகுதியில் வளர்ந்*

துள்ள பார்த்தீனியம் செடி களை வேரோடு பிடுங்கி தீயில் எரித்தோ அல்லது மண்ணில் பள்ளம் தோண்டி புதைக்க வேண்டும்.

வேரோடு பிடுங்கி மண்ணின் மேற்புறம் பார்த்தீனியம் செடிகளை வீசி எறிந்து விட்டு சென்றால் அதில் இருந்து ஏராளமான செடிகள் தோன்ற வாய்ப்புள்ளது. எனவே மனித இனத்துக்கும், விவசாய நிலத் துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் பார்த்தீனியம் செடிகளை பொதுமக்கள் அழிக்க முன்வர வேண்டும். மேலும் தங்களது பகுதிக்கு வரும் பார்த்தீனியம் செடிகள் ஒழிப்பு குழுவினருக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கு மாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**
வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,850–2,950

**மணிலா பயறு**
80கிலோ கொண்ட மூட்டை 4,600–4,800

**கடலை எண்ணெய்**
ஒரு குவிண்டால்
(வரி உள்பட) 10,600.00

**கடலை புண்ணாக்கு**
70கிலோ மூட்டை
(சாக்கு வரி உள்பட ) 1,600.00

**தேங்காய் எண்ணெய்**
15 கிலோ கொண்ட டின்
(வரி உள்பட) 1,627.00

**நல்லெண்ணெய்**
குமாகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா புவனேசுவரி,பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்
ஒரு குவிண்டால் (வரி உள்பட) 11,750.00
அக்மார்க் 1750–1850

**விளக்கெண்ணெய்**
ஒரு குவிண்டால்
(வரி உள்பட) 8,900.00
15கிலோ டின் (வரி உள்பட) 1,600.00

**சூரிய காந்தி எண்ணெய்**
சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ டின்
(வரி உள்பட) 1,150–1,155

**ரீபைண்டு ஆயில்**
சுத்திகரிக்கப்பட்டது.
15 கிலோ டின் (வரி உள்பட) 1,750–1,770

**வனஸ்பதி**
டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,115–1,130

**பாமாயில்**
10 கிலோ டின் (வரி தனி) 575.00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,பிப்.20–
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 9,000 | 95.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,650 | 85.00 |
| புளி (40கி) | ரூ. 3,600 | 98.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 1,400 | 78.00 |
| துபருப்பு | ரூ. 5,800 | 60.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 5,200 | 54.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,100 | 64.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,400 | 78.00 |
| தட்டைபயிறு | ரூ. 4,200 | 44.00 |
| மொச்சை பயிறு (ஆவரை) | ரூ. 3,900 | 44.00 |
| கண்டல் கடலை | ரூ. 4,500 | 48.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 3,200 | 62.00 |
| நிலக்கடலை(30கி) | ரூ. 5,200 | 70.00 |
| பச்சைபயிறு | ரூ. 5,400 | 56.00 |
| கொள்ளு | ரூ 1,700 | 20.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 4,800 | 51.00 |
| சர்க்கரை | ரூ. 2,940 | 30.00 |

### மற்ற மாநில பஞ்சு விலை

கோவை, பிப்.20–
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 7,452
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 8,436
3. ஜெ 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 9,912
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 9,842
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 10,067
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 10,404

டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 13,498

## கோவை உழவர் சந்தை

கோவை,பிப்.20–
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 36–48 | கலர்கோஸ் | ரூ. | 18–20 |
| கத்தரிக்காய் | ரூ. | 14–20 | புதினா | ரூ. | 18–00 |
| வெண்டைக்காய் | ரூ. | 14–22 | காலிப்ளவர் | ரூ. | 12–18 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 12–15 | பொறியல் தட்டை | ரூ. | 14–18 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 10–13 | பச்சை பொச்சை | ரூ. | 20–26 |
| புடலை | ரூ. | 10–14 | தேங்காய் | ரூ. | 7–12 |
| பீர்க்கான்காய் | ரூ. | 14–22 | பட்டாணி | ரூ. | 30–80 |
| சுரைக்காய் | ரூ. | 7–10 | கறிவேப்பிலை | ரூ. | 46–00 |
| பாகற்காய் | ரூ. | 16–20 | பூண்டு | ரூ. | 30–100 |
| கொத்தவரை | ரூ. | 18–22 | அகத்தி | ரூ. | 18–00 |
| பூசணிக்காய் | ரூ. | 8–9 | வாழைக்காய் | ரூ. | 16–20 |
| அரசாணிக்காய் | ரூ. | 7–8 | குடைமிளகாய் | ரூ. | 40–42 |
| மேராக்காய் | ரூ. | 14–18 | சாதா பீன்ஸ் | ரூ. | 18–20 |
| பச்சை மிளகாய் | ரூ. | 16–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 36–40 |
| குண்டு மிளகாய் | ரூ. | 18–00 | கறிபீன்ஸ் | ரூ. | 16–18 |
| சின்னவெங்காயம் | ரூ. | 8–12 | புஷ்பீன்ஸ் | ரூ. | 26–30 |
| பெரியவெங்காயம் | ரூ. | 8–10 | காளான் | ரூ. | 80–150 |
| இஞ்சி | ரூ. | 18–20 | இளநீர் (ஒன்று) | ரூ. | 11–14 |
| முருங்கைக்காய் | ரூ. | 70–75 | திராட்சை | ரூ. | 40–80 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 14–22 | மாங்காய் | ரூ. | 40–50 |
| சேனைகிழங்கு | ரூ. | 12–00 | சப்போட்டா 1கிலோ | ரூ. | 16–18 |
| கருணைகிழங்கு | ரூ. | 18–00 | கொய்யா1கிலோ | ரூ. | 30–40 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 14–00 | மாதுளை1கிலோ | ரூ. | 90–160 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 10–14 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 10–13 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 10–12 | வரமிளகாய் | ரூ. | 80–100 |
| சிறுகிழங்கு | ரூ. | 18–00 | ஆப்பிள் | ரூ. | 100–140 |
| முள்ளங்கி | ரூ. | 7–8 | சாத்துக்குடி | ரூ. | 25–00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 18–22 | நெல்லிக்காய் | ரூ. | 34–40 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 10–14 | ஆரஞ்சு | ரூ. | 40–00 |
| நூல்கோல் | ரூ. | 14–16 | வெள்ளரி | ரூ. | 14–34 |
| கொத்துமல்லி | ரூ. | 16–20 | புளி 1 கிலோ | ரூ. | 100–110 |
| டர்னிப்ஸ் | ரூ. | 16–18 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 36–40 |
| முட்டைகோஸ் | ரூ. | 14–18 | அவரை | ரூ. | 10–16 |
| | | | நிலக்கடலை | ரூ. | 28–36 |
| | | | மக்காச்சோளம் | ரூ. | 12–24 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 29,000 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 29,500 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 30,000 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 12,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 12,500 |
| சுக்கு(பழையது) | ரூ. 6,500 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1,000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1,250 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 6,600 |
| கொப்பரை நாடன் | ரூ. 4,250 |
| கொப்பரை ராசு | ரூ. 4,150 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 4,350 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 6,750 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6,100 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 18,250 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 18,500 |
| ரப்பர் பால் | ரூ. 12,800 |
| காப்பி | ரூ. 10,000 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 3,000 |
| நேந்திரகாய் | ரூ. 1,650 |
| இஞ்சி | ரூ. 400 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,பிப்.20–
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லரை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,830 | 120.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1,180 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1,210 | 78.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1080 | ——— |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1230 | 80.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ.1,520 | 105.00 |
| தேங்காய்எண்ணை | ரூ.1,300 | 90.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ.1,470 | 100.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ.1,100 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ.1,600 | 110.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ.1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ.1,030 | – |
| அபிராமிபிராண்டு | ரூ.1,050 | – |
| சாரதா பிராண்ட் | ரூ.1,050 | – |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.195.00 | அதிகபட்சவிலை | ரூ.238.00 |
| சராசரி விலை | ரூ.157.00 | சராசரி விலை | ரூ.220.00 |
| குறைந்தபட்சவிலை | ரூ.135.00 | குறைந்தபட்சவிலை | ரூ.185.00 |

**பட்டு நூல் ரூ.1,725**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 21,032.00 | 21,032.00 | 21,040.00 |
| ஒரு கிராம் | 2,629.00 | 2,629.00 | 2,630.00 |
| **வெள்ளி** | | | |
| 1 கிலோ | 56,915.00 | 60,900.00 | 61,000.00 |
| ஒரு கிராம் | 60.90 | 60.90 | 61.00 |